
விசுவாசம் உடையவராய் இருத்தல்
பாடம் 8 மே 23, 2026



“விசுவாசமானது
நம்பப்படுகிறவை
களின்
உறுதியும்
காணப்படாதவை
களின்
நிச்சயமுமாயிரு
க்கிறது.”


(எபிரேயர் 11:1)


தேவனைப் பற்றிய அறிவு, வேதாகம படிப்பு மற்றும் ஜெபம் ஆகியவை நம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் கூறுகளாக அமைவதற்கு, அவற்றிடையே ஒரு பொதுவான அம்சம் இருக்க வேண்டும்: விசுவாசம்.

விசுவாசம் இல்லாமல், இவ்வம்சங்கள் வெறும் அறிவாகவோ, அல்லது பொருளற்ற சடங்குகளாவோ மாறிவிடுகின்றன.

ஆனால் விசுவாசத்துடன் பார்க்கும்போது, அவை நம் ஆன்மீக அனுபவத்தின் மிக உயர்ந்த சிகரங்களுக்கு நம்மை அழைத்து செல்லும் வலிமைமிக்க கூறுகளாக திகழ்கின்றன: “விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்” (மாற்கு 9:23).







**பல்வேறு வகையான விசுவாசம்:**

- விசுவாசமும் அடையாளங்களும்
- விசுவாசத்தின் அளவீடு
- விசுவாசமும் உணர்வுகளும்

**விசுவாசம் என்றால் என்ன?**

- விசுவாசத்தின் வரையறையும் வளர்ச்சியும்
- இயேசுவின் விசுவாசம்

# பல்வேறு வகையான விசுவாசம்

# விசுவாசமும் அடையாளங்களும்

"அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்." (யோவான் 4:48)







ஒரு அடையளம் என்பது, இறைவனால் அருளப்பட்ட ஒரு செய்தியை உறுதிப்படுத்தவோ அல்லது இறை அதிகாரத்திற்கு வலுசேர்க்கவோ அளிக்கப்படும் ஒரு தனித்துவமான குறி அல்லது வெளிப்பாடாகும். பொதுவாக, கானா ஊரின் திருமண விழாவில் நிகழ்ந்தது போன்ற ஒரு அற்புத நிகழ்வே அடையாளம் என்று புரிந்துகொள்ளப்பட்டாலும் (யோவான் 2:11)—இஸ்ரவேல் மக்கள் தேவனை வழிபடுவதற்காக சீனாய் மலைக்கு முன்பாக முகாமிட்ட நிகழ்வும் ஓர் அடையாளமாகவே வழங்கப்பட்டது (யாத் 3:12).



இயேசுவே மேசியா என்பதை நிரூபிக்கும் வகையிலான ஏதேனும் ஒரு அடையாளத்தை தங்களுக்கு காட்டுமாறு பரிசேயர்கள் அவரிடம் கேட்டனர். அதன் மூலம் அவர்களால் அவரை விசுவாசிக்க முடியும் என்று கருதினர்(மாற்கு 8:11).

தங்கள் நம்பிக்கையின்மையை நியாயப்படுத்த அவர்கள் ஓர் அடையாளத்தை கேட்ட போது, இயேசு சினமுற்றார்(மாற்கு 8:12). ஒருவர் நம்ப விரும்பாத போது, எந்தவொரு அடையாளத்தாலும் அவரை நம்பவைக்க முடியாது.

நம்ப விரும்பும் எவரும் நம்புவதற்கு போதுமான சான்றுகளை, தேவன் தமது வார்த்தையிலும் இயற்கையிலும் நமக்கு வழங்கியுள்ளார். இருப்பினும், அங்கே எப்போதும் ஐயத்திற்கு இடமுண்டு. அதனால்தான் இயேசு ஒரு சிறப்பான ஆசியை வழங்கினார் "காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" (யோவான் 20:29).

# விசுவாசத்தின் அளவீடு



"அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்." (லூக்கா 17:6)

**விசுவாசத்திற்கு பல்வேறு அளவீடுகள் உள்ளன:**

**அப்போஸ்தலர்களின் விசுவாசம்**




"ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று?" (மாற்கு 4:40)

**பேதுருவின் விசுவாசம்**



"அற்ப விசுவாசியே!" (மத். 14:31)

**தகப்பனின் விசுவாசம்**



"என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும்" (மாற்கு 9:24)

**கானானிய ஸ்திரியின் விசுவாசம்**



"உன் விசுவாசம் பெரிது" (மத். 15:28)

**நூற்றுக்கதிபதியின் விசுவாசம்**



"இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை" (லூக்கா 7:9)

**ஸ்தேவானின் விசுவாசம்**



"விசுவாசமும் … நிறைந்தவனாகிய" (அப் 6:5)

அவிசுவாசத்தின் வேர்கள் பிடுங்கி எறியப்படும் போது, விசுவாசம் வளரக்கூடும் என்பது தெளிவாகிறது. விசுவாசம் படிப்படியாக அவிசுவாசத்தை மாற்ற வேண்டும். நம்முடைய விண்ணப்பமெல்லாம்: "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும்" (லூக்கா. 17:5) என்பதே.

பரிசுத்த ஆவியானவரின் செயல்மூலமாகவும், வேதாகம படிப்பு மூலமாகவும், தேவனுடனான அனுபவம் மூலமாகவும் "உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறதை" (2தெச. 1:3) நீங்கள் காண இயலும்.





# விசுவாசமும் உணர்ச்சிகளும்

“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;” (எபேசியர் 2:8)





**விசுவாசம் என்பது ஒரு உணர்வா அல்லது ஒரு பகுத்தறிவு செயலா?**

இந்த கேள்விக்கான பதில் முக்கியமானது. நான் “இரட்சிக்கப்பட்டதாக உணர்கிறேன்” என்று சொல்வதும், “நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று அறிவேன்” என்று சொல்வதும் ஒன்றல்ல.

ஆனால் நாம் தொடக்கத்திலிருந்தே ஆரம்பிப்போம். விசுவாசத்தின் மூலதனம் என்ன? விசுவாசம் தேவனிடமிருந்தே வருகிறது, அதை அவர் நமக்கு ஒரு பரிசாக அளிக்கிறார் (ரோ. 12:3; எபே. 2:8).



அந்த பரிசிற்கு நாம் நேர்மறையாக பதிலளிக்கும் போது—அதாவது நாம் விசுவாசத்தை பயன்படுத்த தொடங்கும் போது—அந்த விசுவாசம் மகிழ்ச்சி, அமைதி மற்றும் ஆன்மீக நிம்மதி போன்ற உணர்வுகளை உருவாக்குகிறது; ...



ஆனால் விசுவாசம் என்பது ஒரு உணர்வு அல்ல; அது ஒரு “நிச்சயமும் உறுதியும்” ஆகும் (எபி. 11:1). அது நமது மனநிலையை சார்ந்திருக்கும் ஒன்றல்ல. நான் பலவீனமாக உணரும்போதோ, அல்லது எனது இரட்சிப்பு வெகு தொலைவில் இருப்பதாக உணரும்போதோ தான், நான் மிக அதிகமான விசுவாசத்தை பயன்படுத்த வேண்டும்.

# விசுவாசம் என்றால் என்ன?

# விசுவாசத்தின் வரையறையும் வளர்ச்சியும்

எபிரேயர் 11:1, 3, மற்றும் 6 வசனங்கள் விசுவாசத்திற்கான ஒரு பரந்த வரையறையை நமக்கு வழங்குகின்றன. விசுவாசம் என்பது, தேவனை பற்றிய நமது புரிதலோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அவர் சிருஷ்டிகராகவும், பலனளிப்பராகவும் இருக்கிறார் என்று விசுவாசிக்க அது நம்மை வழிநடத்துகிறது.


இவ்வதிகாரத்தின் எஞ்சிய பகுதியில், நாம் நமது வெகுமதிக்காக காத்திருக்கும் வேளையில் மனம் தளராமல் இருப்பதற்கு, முன்மாதிரியாகவும் ஊக்கமாகவும் திகழும் அநேக ஆண்கள் மற்றும் பெண்களின் விசுவாசத்தைப் பற்றி பவுல் விரிவாக விளக்குகிறார்.

நாம் கண்டது போல, நம் அனைவருக்கும் ஒரே அளவிலான விசுவாசம் இருப்பதில்லை. என்னிடம் இருக்கும் விசுவாசம் - அது குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரி – அதை நான் எவ்வாறு வளர்த்துக்கொள்வது?


"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."
(எபிரேயர் 11:1)




உங்கள் விசுவாசம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, அதை கடைபிடியுங்கள் (மத். 17:20)



வேதாகமத்தை படியுங்கள் (ரோ. 10:17)


விசுவாசத்தை அதிகரிக்க தேவனிடம் கேளுங்கள்(லூக். 17:5)


சந்தேகத்திற்கு இடம் கொடுக்காதிருங்கள்( மாற் 9:23-24)


மற்றவர்களின் விசுவாசத்தை அடிப்படையாக கொண்டு உங்கள் விசுவாசத்தை அமைக்காதிருங்கள் (மத். 25:8)


பரிசுத்த ஆவியானவருக்கு பதிலளியுங்கள்(கலா. 5:22)


விசுவாசத்தை பழக்கமாக்கி கொள்ளுங்கள்(2 கொரி. 5:7)



# இயேசுவின் மேலுள்ள விசுவாசம்

"தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான்." (வெளிப்படுத்தல் 14:12)

இயேசுவின் வருகைக்கு நெருக்கமாக இருக்கக்கூடிய நாம், காத்துக்கொள்ள (அதாவது கீழ்படிய அல்லது பாதுகாக்க) வேண்டிய இரண்டு காரியங்களால் வேறுப்படுத்தப்படுகிறோம்: கட்டளைகளும் இயேசுவின் மேலுள்ள விசுவாசமும்(வெளி. 14:12).

நியாயப்பிரமாணமும் (பத்து கற்பனைகளும்) சுவிஷேசமும் (விசுவாசமும்) ஒன்றோடொன்று பின்னி பிணைந்துள்ளன. விசுவாசம் இல்லாமல் கீழ்படியவோ, கீழ்படியாமல் விசுவாசிக்கவோ முடியாது. ஆனால் "இயேசுவின் மேலுள்ள விசுவாசம்" என்பதன் பொருள் என்ன?

- இயேசுவுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்படிதல்
- இயேசுவுடன் தினசரி அனுபவம் பெறுதல்
- இயேசுவை நம் வாழ்வின் மையமாக ஆக்குதல்
- நம்முடைய விசுவாசத்தின்படி வாழ்தல்
- நம் விசுவாசத்தை இயேசுவின் மீது நிலைநிறுத்துதல்
- நம் வாழ்வில் இயேசுவை பிரதிபலித்தல்
- அவருடைய கிருபையின் பரிசை ஏற்றுக்கொள்ளுதல்



இயேசுவின் மீது விசுவாசம் வைப்பதன் மூலம் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோ. 5:1), பரிசுத்தமாக்கப்படுகிறோம் (அப் 26:18), மற்றும் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (யோவான் 1:12).

“பிறகு, கர்த்தராகிய இயேசு உங்களை படிப்படியாக சரியான பாதையில் வழிநடத்துவார் என்று நம்புங்கள். நீங்கள் முன்னேறும் ஒவ்வொரு அடியிலும் உறுதியையும் பெலத்தையும் பெறலாம், ஏனெனில் உங்கள் கை அவருடைய கரத்தில் இருக்கிறது என்று நீங்கள் உறுதியாக நம்பலாம். நீங்கள் "ஓடலாம், களைப்படைய மாட்டீர்கள்"; நீங்கள் "நடக்கலாம், சோர்ந்துபோக மாட்டீர்கள்," ஏனெனில் உங்கள் கை கிறிஸ்துவின் கரத்தில் இருக்கிறது என்பதை விசுவாசத்தினால் நீங்கள் உணர்ந்துகொள்ளலாம். நீங்கள் சோர்வினால் வீழ்ந்துபோக மாட்டீர்கள், ஏனெனில் கர்த்தரை அறிந்து, அவர்மீது நம்பிக்கை வைத்து நீங்கள் அவரைப் பின்தொடரும்போது, தம்மை முழுமையாக நம்புபவர்களை ஒருபோதும் கைவிடாதவரே உங்கள் நிலையான உதவியாளர் என்ற உறுதியைப் பெறுவீர்கள்.”

எலன் ஜி உவைட் (அவர் ஃபாதர் கேர்ஸ், அக்டோபர் 27)